கவனிக்க .- 2026.01.30 ஆந் திகதிய 2474 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II(தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2479- 2026 මාර්තු මස 06 වැනි සිකුරාදා - 2026.03.06

2479ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 298 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 300 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 302 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 304 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, மாச்சு மாதம் 27ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, மாச்சு மாதம் 13ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


297 - B 82761- 417(2026/02)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## விவசாயம், நீர்ப்பாசனம் , காணி மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சு

## நில அளவைத் திணைக்களம்

## கேள்விமனு அறிவித்தல்

பிராந்திய ஆய்வு அலுவலகங்களுக்கான கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் - 2026

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2026.03.20ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுகோரல்கள் பி.ப.2.05 மணிக்கு திறக்கப்படும்.

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | கலிகமுவ | மாகாண நில அளவையாளர் நாயகம்(சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | கலிகமுவவைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2026.05.01 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | பெல்மதுல்ல | மாகாண நில அளவை யாளர் நாயகம்(சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | பெல்மதுல்ல வைச் சுற்றி யுள்ள நகரங்கள் | 2026.05.01 |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | கேகாலை | மாகாண நில அளவை யாளர் நாயகம்(சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | கேகாலைக்கு அருகில் நகரம் | 2026.05.01 |
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | திரப்பனே | மாகாண நில அளவை யாளர் நாயகம்(வட மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் அலுவலகம், அநுராதபுரம் | திரப்பனேயைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2026.05.15 |

**<u>பூரணப்படுத்தப்படவேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்:</u>**

அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வெவ்வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவிற்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்கு செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலகர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இட வசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த

வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் ( இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2026.03.20ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

பி.கே.எல்.எஸ். பண்டிவவல,
மேலதிக நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு -05.
2026.02.27.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2026**
**விலைமனுக்கோரல் விண்ணப்பப்படிவம் - 2026**

**கட்டிட உரிமையாளருக்காக:**

01. முழுப் பெயர்: ................
02. முகவரி: ................
03. தொலைபேசி இலக்கம்: ................
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ................

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்தப் பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது? ................
02. மாதாந்த வாடகைத் தொகை?
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி:
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி.மீ: ................
05. இடத்தின் விஸ்தீரணம்: ................
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும்: ................
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா?: ...............
08. தனியாக அவதானிக்கக் கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா?: ................
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் ( மதில்/ கம்பி/ வேலி: ................)
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை: ................
11. கம்பி மூல தொலைபேசித் தொடர்பு உள்ளதா?: ................

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.

.....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ................

03- 64

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்**

நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்கள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான பின்வரும் பொருட்கள் 2026.03.07 ஆந் திகதி ஆந் திகதி இந் நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

02. யாரவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொருட்களில் உரிமை கோருமிடத்து விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

03. பொதுமக்கள் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிட முடியும்.

04. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக் காதவிடத்துஅப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

05. விற்கப்பட்ட பொருட்களுக்கு பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவிலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகம் தரவேண்டும்.

எஸ். லெனின்குமார்,
நீதிபதி.

நீதிவான் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

**சான்றுப் பொருள் விபரம்**

| *தொ.இல.* | *வழக்கு இல.* | *சான்றுப்பொருள் விபரம்* |
|---|---|---|
| 01 | AR/1430/25 | பழுதடைந்த குளிர்சாதனப் பெட்டி |
| 02 | | செப்புச்சுருள் |
| 03 | | பானை |
| 04 | | கிடாரம் |
| 05 | | உடைந்த பாரம் தூக்கி |
| 06 | | தரத்திலான அலுமாரியின் பாகம் |
| 07 | | L வடிவிலான இரும்பு கேடர் |
| 08 | | இரும்புக் குழாய் பெரிது |
| 09 | | இரும்புக் குழாய் சிறிது |
| 10 | | இரும்புக் ஒரு தொகை |
| 11 | | மேசை |
| 12 | | மரத்தினாலான ஸ்ரான்ட் |
| 13 | | சிறிய பெட்டகம் |

| *தொ.இல.* | *வழக்கு இல.* | *சான்றுப்பொருள் விபரம்* |
|---|---|---|
| 14 | AR/1430/25 | கதிரை 02 |
| 15 | | சிறிய துவிச்சக்கர வண்டி |
| 16 | | சவள் |
| 17 | | மரப்பலகை |
| 18 | | அலவாங்கு |
| 19 | | தார்பாய் |
| 20 | MC/18561/S/26 | கத்தி |

கைத்தொலைபேசி மற்றும் கமரா

| *தொ.இல.* | *வழக்கு இல.* | *சான்றுப்பொருள் இல.* | *சான்றுப்பொருள் விபரம்* |
|---|---|---|---|
| 01 | MC/17228/PC/25 | PR/21/25 | விவோ |
| 02 | MC/536/PC/20 | PR/2107/19 | சம்சுங் 07 |
| 03 | MC/4137/PC/23 | PR/2530/22 | டெக்னோ |
| 04 | AR/393/11 | PR/17/11 | பிளேக்பெரி |
| 05 | AR/521/23 | PR/1114/23 | சம்சுங் கலக்ஸி |
| 06 | 27375 | PR/06/12 | நொக்கியா |
| 07 | MC/2673/PC/22 | PR/2087/21 | நொக்கியா |
| 08 | AR/602/16 | PR/115/16 | கனொன்கமரா |
| 09 | | PR/116/16 | சம்சுங்J 02 |
| 10 | | 118/16 | HTC |
| 11 | | PR/119/16 | சம்சுங் கலக்ஸி |

03- 48

---

**நீதிவான் நீதிமன்றம் - பருத்தித்துறை**

**சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை**

பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான கீழ்வரும் சான்றுப்பொருட்கள் எதிர்வரும் 2026.03.14ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

நிபந்தனைகள்-

1.குறிப்பிட்ட பொருட்கள் சம்பந்மாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

2.ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் குறிப்பிட்ட பொருட்களை பொது மக்கள் பார்வையிட முடியும்.

3.ஏல விற்பனையில் பங்கு பற்றுபவர்கள் தம்முடன் தேசிய அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும்

4. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

5.ஏலத்தில் விற்கப்படும் பொருட்களை உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும் என்பதுடன் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இந்துஜா சிவலிங்கம் ,
நீதிபதியும் நீதிவானும்.

நீதிவான் நீதிமன்றம்,
பருத்தித்துறை,
2026.02.24.

| தொ.இல. | வழக்கு இல. | சான்றுப்பொருள் விபரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டு விலை |
|---|---|---|---|---|
| 01 | 1636/21 | சவள் | 01 | 100.00 |
| 02 | B/408/21 | சவள் | 02 | 150.00 |
| 03 | B/418/25 | சவள் | 02 | 300.00 |
| 04 | B/339/18 | சவள் | 01 | 150.00 |
| 05 | B/222/21 | சவள் | 01 | 50.00 |
| 06 | B/80/18 | சவள் | 01 | 150.00 |
| 07 | 2485/25 | சவள் | 02 | 300.00 |
| 08 | 35983 (B/100/20) | சவள் | 02 | 250.00 |
| 09 | 33170 (B/172/15) | சவள் | 03 | 400.00 |
| 10 | B/417/21 | சவள் | 03 | 400.00 |
| 11 | 1502/22 | சவள் | 01 | 150.00 |

| *தொ.இல.* | *வழக்கு இல.* | *சான்றுப்பொருள் விபரம்* | *எண்ணிக்கை* | *மதிப்பீட்டு விலை* |
|---|---|---|---|---|
| 12 | 36445<br>(B/161/20) | சவள் | 01 | 100.00 |
| 13 | 37645 | சவள் | 02 | 300.00 |
| 14 | 35046<br>(B/158/19) | சவள் | 02 | 250.00 |
| 15 | 638/25 | சவள் | 02 | 250.00 |
| 16 | 403/23 | சவள் | 01 | 100.00 |
| 17 | 278/23 | சவள் | 01 | 50.00 |
| 18 | B/655/20 | சவள் | 03 | 400.00 |
| 19 | B/509/24 | சவள் | 01 | 100.00 |
| 20 | 705/23<br>(B/563/21) | கோடரி | 01 | 500.00 |
| 21 | 2828/25<br>(B/208/22) | கோடரி | 01 | 1,000.00 |
| 22 | 827/22 | கோடரி | 01 | 350.00 |
| 23 | 28404<br>(B/280/16) | **கோடரி** | 01 | 200.00 |
| 24 | 1199/21 | சவள் | 01 | 100.00 |
| 25 | 36406<br>(B/546/19) | 1. மடிக் கணனி<br>2.இலக்கம் தெளிவற்ற துவிச்சக்கர வண்டி | 01 | 300.00<br>2,000.00 |
| 26 | 778/22<br>(B/127/21) | இலக்கம் தெளிவற்ற துவிச்சக்கர வண்டி | 01 | 1,500.00 |

| *தொ.இல.* | *வழக்கு இல.* | *சான்றுப்பொருள் விபரம்* | *எண்ணிக்கை* | *மதிப்பீட்டு விலை* |
|---|---|---|---|---|
| 27 | AR 659/23 | கையடக்கத் தொலைபேசி | 01 | 200.00 |
| 28 | AR 660/23 | கையடக்கத் தொலைபேசி | 01 | 150.00 |
| 29 | AR 658/23 | கையடக்கத் தொலைபேசி | 01 | 200.00 |
| 30 | 33607 (B/331/17) | கறுப்பு நிற பொக்ஸ் | 02 | 1,000.00 |
| 31 | 1317/21 (B/495/21) | பெரிய பானை | 01 | 100.00 |
| 32 | 1376/24 | **சவள்** | 01 | 150.00 |
| 33 | 756/24 (B/345/22) | கையடக்கத் தொலைபேசி | 01 | 150.00 |
| 34 | AR/71/26 | இலக்கம் தெளிவற்ற துவிச்சக்கர வண்டி | 01 | 1,000.00 |
| 35 | AR/71/26 | 9907881 இலக்க துவிச்சக்கர வண்டி | 01 | 300.00 |
| 36 | AR/71/26 | 69910261 இலக்க துவிச்சக்கர வண்டி | 01 | 750.00 |
| 37 | AR/71/26 | 57153111 இலக்க துவிச்சக்கர வண்டி | 01 | 1,000.00 |
| 38 | AR/71/26 | 70033306 இலக்க துவிச்சக்கர வண்டி | 01 | 1,000.00 |
| 39 | AR/71/26 | 69603416 **இலக்க துவிச்சக்கர வண்டி** | 01 | 400.00 |
| 40 | AR/71/26 | 56025936 **இலக்க துவிச்சக்கர வண்டி** | 01 | 350.00 |
| 41 | AR/71/26 | **இலக்கம் தெளிவற்ற துவிச்சக்கர வண்டி** | 01 | 400.00 |

| *தொ.இல.* | *வழக்கு இல.* | *சான்றுப்பொருள் விபரம்* | *எண்ணிக்கை* | *மதிப்பீட்டு விலை* |
|---|---|---|---|---|
| 42 | AR/71/26 | இலக்கம் தெளிவற்ற துவிச்சக்கர வண்டி | 01 | 300.00 |
| 43 | 36318 | NP HL 6911 ஆம் இலக்க Hero Honda Ambition மோட்டார் சைக்கிள் | 01 | 10,000.00 |
| 44 | AR/1559/25 | 153-6410 ஆம் இலக்க Bajaj 4S chaampion மோட்டார் சைக்கிள் | 01 | 10,000.00 |

03- 44

---

**நீதிவான் நீதிமன்றம் - வாழைச்சேனை**

வாழைச்சேனை நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை

1.வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான பின்வரும் பொருட்கள் 2026.03.14 ஆந் திகதி இந் நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து காலை 9.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

02. யாரவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொருட்களில் உரிமை கோருமிடத்து விற்பனை நியமிக்கப்பட்ட தினத்தில் விற்பனை தொடங்குவதற்கு 1/2 (அரை ) மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை எழுத்து மூலமாக இந்நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும்.

03. பொதுமக்கள் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனை தொடங்குவதற்கு 1/2 (அரை) அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிட முடியும்.

04. ஏல விற்பனையின் போது விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் பி.ப. 4.00 மணிக்கு முன்னர் இந்நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படல் வேண்டும்.

05. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களில் மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

06. எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்பட வேண்டும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

07. ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புகின்றவர்கள் கட்டாயமாக தமது தேசிய ஆளடையாள அட்டையுடன் சமுகமளித்திருக்க வேண்டும்.

08. ஏல விற்பனை தொடர்பில் ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின் குறித்த தினம் ஏல விற்பனை நடவடிக்கைகள் முடிவடைவதற்கு முன்னர் நீதிமன்றிற்கு அறியப்படுத்த வேண்டும். பின்னர் மேற்கொள்ளப்படும் எம் முறைப்பாடும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

எம்.எம்.றகீப் அகமட்,
மாவட்ட நீதிபதி/ நீதிவான்.

மாவட்ட நீதிவான் நீதிமன்றம்,
வாழைச்சேனை.

**பகிரங்க ஏல விற்பனைப் பொருட்களின் விபரம்**

| *தொ.இல.* | *வழக்கு இலக்கம்* | *சான்றுப்பொருள் தொடர்பான விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 1 | 10278/FD | கோடரி | 01 |
| 2 | 10280/FD | கத்தி | 01 |
| 3 | 10281/FD | கத்தி | 01 |
| 4 | 51560/FD | கத்தி | 01 |
| 5 | 51227/FD | கத்தி | 01 |
| 6 | 51878/FD | கத்தி | 01 |
| 7 | 51881/FD | கத்தி | 01 |
| 8 | 51561/FD | கத்தி | 01 |
| 9 | 51562/FD | கோடரி | 01 |
| 10 | 51880/FD | கோடரி | 01 |
| 11 | 51882/FD | கோடரி | 01 |
| 12 | 10226/FD | கோடரி | 01 |
| 13 | 10279/FD | மண்வெட்டி<br>சவள்<br>வாளி | 01 |
| 14 | 51575/FD | சவள் | 02 |
| 15 | 51556/FD | சவள் | 02 |
| 16 | 51259/FD | சவள் | 01 |
| 17 | 51745/FD | சவள் | 03 |
| 18 | 51654/FD | சவள் | 01 |
| 19 | 51759/FD | சவள் | 01 |
| 20 | 51760/FD | சவள் | 01 |
| 21 | 51846/FD | சவள் | 02 |
| 22 | 51884/FD | சவள்<br>மண்வெட்டி | 01 |
| 23 | B/38/24 | சுத்தியல் | 01 |
| 24 | B/27/22 | சுத்தியல் | 01 |

| தொ.இல. | வழக்கு இலக்கம் | சான்றுப்பொருள் தொடர்பான விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 25 | B/470/21 | சுத்தியல் | 01 |
| 26 | B/265/23 | அலவாங்கு | 01 |
| 27 | B/1329/23 | அலவாங்கு | 01 |
| 28 | B/36/20 | அலவாங்கு | 01 |
| 29 | B/353/23 | அலவாங்கு | 01 |
| 30 | B/303/20 | அலவாங்கு | 02 |
| 31 | B/204/22 | அலவாங்கு | 01 |
| 32 | B/638/23 | அலவாங்கு | 01 |
| 33 | B/17/14 | அலவாங்கு | 01 |
| 34 | B/132/21 | அலவாங்கு | 01 |
| 35 | B/04/19 | அலவாங்கு | 01 |
| 36 | AR/47/14 | அலவாங்கு | 02 |
| 37 | PR/938/20 | அலவாங்கு | 01 |
| 38 | PR/449/24 | அலவாங்கு | 01 |
| 39 | No Number | அலவாங்கு | 03 |
| 40 | B/11/23 | கம்பி | 01 |
| 41 | No Number | கம்பித் துண்டுகள் | 03 |
| 42 | B/656/21 | இரும்புக் குழாய் | 01 |
| 43 | AR/39/26 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 44 | 8857/S | மோட்டார் சைக்கிள்<br>பதிவு இல. : NC TW 4970 | 01 |
| 45 | S/43867/26 | இழுவைப் பெட்டி<br>பதிவு இல.: இல்லை<br>( இரும்பிற்கு மாத்திரம்) | 01 |
| 46 | S/43867/26 | உழவு இயந்திரம்<br>பதிவு இல.: RF-3704 | 01 |
| 47 | No Number | ஆற்று மணல் | ஒரு தொகை |
| 48 | No Number | ஊத்தை மண் | ஒரு தொகை |
| 49 | No Number | வெற்றுக் கலன்கள் | ஒரு தொகை |
| 50 | No Number | வேற்று பரல்கள் | ஒரு தொகை |

**அறிவித்தல்**
**மூதூர் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம்**
**பகிரங்க ஏல விற்பனை -2026.03.14**

1.மூதூர் மாவட்ட நீதவான் நீதிமன்றினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அரசுடமையாக்கப்பட்டதும் மற்றும் உரிமை கோரப்படாத பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை 2026.03.14 ஆந் திகதி காலை 9.00 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் நடாத்தப்படும்.

02. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

03. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களிற்கு உரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏலவிற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

04.விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. பொருட்களைக் கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை கொண்டு வர வேண்டும்.

U.L.வஸீம் அஹமட்,
மாவட்ட நீதிபதி/ நீதிவான்.

மாவட்ட நீதிவான் நீதிமன்றம்,
மூதூர்.

பொருட்களின் விபரம்

| *தொ.இல.* | *வழக்கு இலக்கம்* | *சான்றுப்பொருள் தொடர்பான விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 01 | MC/62047/25 | ஆற்று மணல் | கியூப் 3 |
| 02 | MC/62064/25 | ஆற்று மணல் | கியூப் 0.75 |
| 03 | MC/62149/25 | ஆற்று மணல் | கியூப் 0.75 |
| 04 | MC/62168/25 | ஆற்று மணல் | கியூப்0.75 |
| 05 | MC/62183/25 | ஆற்று மணல் | கியூப் 0.75 |
| 06 | MC/62212/25 | ஆற்று மணல் | கியூப்0.75 |
| 07 | MC/62211/25 | ஆற்று மணல் | கியூப் 0.75 |
| 08 | MC/62237/25 | ஆற்று மணல் | கியூப் 0.75 |
| 09 | MC/62477/25 | ஆற்று மணல் | கியூப்0.75 |
| 10 | MC/61440/25 | ஆற்று மணல் | கியூப்3 |
| 11 | MC/62686/25 | ஆற்று மணல் | கியூப் 0.75 |
| 12 | MC/62685/25 | ஆற்று மணல் | கியூப் 0.75 |
| 13 | MC/62722/25 | ஆற்று மணல் | கியூப் 0.75 |
| 14 | MC/62721/25 | ஆற்று மணல் | கியூப் 0.75 |
| 15 | MC/63225/26 | ஆற்று மணல் | கியூப்3 |
| 16 | MC/63071/26 | ஆற்று மணல் | கியூப் 3 |

| *தொ.இல.* | *வழக்கு இலக்கம்* | *சான்றுப்பொருள் தொடர்பான விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 17 | MC/61986/25 | ஆற்று மணல் | கியூப் 3 |
| 18 | MC/62698/28 | ஆற்று மணல் | கியூப் 3 |
| 19 | MC/63224/26 | களிமண் ( கிரவல்) | கியூப் 3 |
| 20 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | களிமண் ( கிரவல்) | கியூப் 6 |
| 21 | MC/63004/26 | காட்டு கத்தி | 01 |
| 22 | MC/52269/21 | காட்டு கத்தி | 01 |
| 23 | MC/52112/24 | காட்டு கத்தி | 01 |
| 24 | BR/92/23 | அலவாங்கு ( சிறியது) | 01 |
| 25 | MC/54138/23 | அலவாங்கு ( சிறியது) | 01 |
| 26 | MC/59660/25 | கோடரி | 01 |
| 27 | MC/53415/26 | கத்தி ( சிறியது) | 01 |
| 28 | MC/59690/25 | கத்தி ( சிறியது) | 01 |
| 29 | MC/38158/18 | கத்தி ( சிறியது) | 01 |
| 30 | MC/51178/21 | கத்தி ( சிறியது) | 01 |
| 31 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | கத்தி | 01 |
| 32 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | அலுமினிய தாச்சி ( பெரியது) | 01 |
| 33 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | அலுமினிய தாச்சி ( பெரியது) | 01 |
| 34 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | அலுமினிய தாச்சி ( பெரியது) | 01 |
| 35 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | அலுமினிய தாச்சி (  சிறியது) | 01 |
| 36 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | அலுமினிய தாச்சி ( சிறியது) | 01 |
| 37 | MC/62800/26 | அலுமினிய தாச்சி ( பெரியது) | 01 |
| 38 | MC/62461/25 | அலுமினிய தாச்சி ( பெரியது) | 01 |
| 39 | MC/63375/26 | அலுமினிய தாச்சி ( பெரியது) | 01 |
| 40 | MC/62086/25 | அலுமினிய தாச்சி ( பெரியது) | 01 |
| 41 | MC/62353/25 | அலுமினிய தாச்சி ( பெரியது) | 01 |
| 42 | MC/61345/25 | அலுமினிய தாச்சி ( பெரியது) | 01 |
| 43 | MC/56326/25 | அலுமினிய தாச்சி ( பெரியது) | 01 |

| தொ.இல. | வழக்கு இலக்கம் | சான்றுப்பொருள் தொடர்பான விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 44 | MC/59553/25 | அலுமினிய குடம் ( சிறியது) | 01 |
| 45 | MC/63375/26 | அலுமினிய குடம் | 01 |
| 46 | MC/62837/25 | அலுமினிய குடம் ( சிறியது) | 01 |
| 47 | MC/62089/25 | கிடாரம் ( சிறியது) | 01 |
| 48 | MC/62353/25 | கிடாரம் ( சிறியது) | 01 |
| 49 | MC/62086/25 | கிடாரம் | 01 |
| 50 | MC/62800/26 | கிடாரம் | 01 |
| 51 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | இரும்பு பரல் ( சிறியது) | 01 |
| 52 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | இரும்பு பரல் | 01 |
| 53 | MC/62159/25 | இரும்பு பரல் | 01 |
| 54 | MC/63257/26 | இரும்பு பரல் | 01 |
| 55 | MC/62121/25 | இரும்பு பரல் | 01 |
| 56 | MC/63149/26 | இரும்பு பரல் | 01 |
| 57 | MC/62322/25 | இரும்பு பரல் | 01 |
| 58 | MC/62828/26 | பிளாஸ்டிக் பரல் | 01 |
| 59 | MC/62665/25 | பிளாஸ்டிக் பரல் | 01 |
| 60 | MC/63059/26 | கோடரி | 01 |
| 61 | MC/55101/23 | கத்தி | 01 |
| 62 | MC/55101/23 | காட்டுக் கத்தி | 01 |
| 63 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | இரும்புத் தகரம் | 19 |
| 64 | MC/62292/25 | வாகன பற்றரி ( சிவப்பு நிறம்) | 02 |
| 65 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | வாகன பற்றரி ( கறுப்பு நிறம்)) | 03 |
| 66 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | சிறிய வெற்று கேன் | 20 |
| 67 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | பெரிய வெற்று கேன் | 41 |
| 68 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | 750 ml கண்ணாடி போத்தல் | 145 |
| 69 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | வெற்று பியர் போத்தல் | 09 |

| *தொ.இல.* | *வழக்கு இலக்கம்* | *சான்றுப்பொருள் தொடர்பான விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 70 | MC/63340/26 | பாடசாலை பை | 01 |
| 71 | MC/61316/25 | இரும்பு கம்பிகள் | 01 |
| 72 | MC/63079/26 | மண்வெட்டி | 01 |
| 73 | MC/63079/26 | சவள் | 01 |
| 74 | MC/63079/26 | அலவாங்கு | 01 |
| 75 | MC/63079/26 | சிறிய சுத்தியல் | 01 |
| 76 | MC/46728/20 | வண்டில் | 01 |
| 77 | MC/50548/20 | மண்வெட்டி | 01 |
| 78 | BR/574/25 | மண்வெட்டி | 02 |
| 79 | BR/730/25 | மண்வெட்டி | 01 |
| 80 | BR/10/24 | அலவாங்கு | 01 |
| 81 | BR/202/20 | அலவாங்கு | 01 |
| 82 | MC/46912/20 | பெரிய இரும்பு வாளி (துளையிடப்பட்டது) | 02 |
| 83 | MC/62068/25 | சிறிய இரும்பு வாளி (துளையிடப்பட்டது) | 01 |
| 84 | MC/56024/24 | சிறிய இரும்பு வாளி (துளையிடப்பட்டது) | 01 |
| 85 | BR/478/24 | சிறிய இரும்பு வாளி (துளையிடப்பட்டது) | 01 |
| 86 | MC/61423/25 | சவள் | 01 |
| 87 | MC/61924/25 | சவள் | 01 |
| 88 | MC/54442/23 | கோடரி | 01 |
| 89 | BR/25/23 | கோடரி | 01 |
| 90 | BR/202/20 | முச்சக்கரவண்டி டயர் (பயன்படுத்தப்பட்டது) | 02 |
| 91 | BR/202/20 | பெரிய வாகன டயர் (பயன்படுத்தப்பட்டது) | 01 |
| 92 | வழக்கிலக்கம் அடையாளம் காணப்படாதவை | பெரிய வாகன டயர் ( பயன்படுத்தப்பட்டது) | 01 |

03- 12

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் பெயர்:* டெசிலியன்ட் ( பீவிடீ) எல்டீடி
*பதிவிலக்கம்:* பீவி 00353061
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2026.01.20
*பதிவு முகவரி:* இலக்கம் 42/16, பான்ஸ் ரத்வத்த மாவத்தை, பலாங்கொடை

கம்பனிப் பணிப்பாளர்.

03- 37

---

## நிறுவனத்தின் பெயர் மாற்ற நிலை குறித்த பொது அறிவிப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் விதிகளுக்கு அமைவாக, நிறுவனத்தின் விசேட தீர்மானத்தின்படி "Vision Grameen Micro Credit (Private) Limited- PV 00217010" எனும் பெயரிலிருந்து "Vision Grameen Micro Credit Limited" என நிறுவனத்தின் நிலை மாற்றப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

இது 2026, பெப்புருவரி 10 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

KRC Corporate Service (Private) Limited,
நிறுவனச் செயலாளர்கள்.

03- 11

---

## பொது அறிவித்தல்

### பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 8 இன் ஏற்பாடுகளின்படி ரியலிடி லங்கா லிமிட்டட் அதன் பெயரை ரியல்டி என்ட் டிஸ்ட்ரிபியூடர்ஸ் எல்டிடி என மாற்றியுள்ளதை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 9(2) இன் விதிகளின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*நிறுவனத்தின் முந்தைய பெயர்:* ரியலிட்டி லங்கா லிமிட்டட்
*நிறுவனத்தின் புதிய பெயர்:* ரியல்டி என்ட் டிஸ்ட்ரிபியூடஸ் எல்டிடி
*பதிவு இல.:* PB 367
*பதிவு அலுவலகம் :* இல.112, "ஹவலொக் வீதி", கொழும்பு 05

சபையின் ஆணைப்படி,

ஹேலீஸ் குருப் சேர்விசஸ் ( பிறைவெட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

இல.400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2026, பெப்புருவரி 13.

03- 08

---

## டி எச் டீ சிமெண்ட் ( பிறைவெட்) லிமிடெட் ( நிறுவன பதிவு இல. PV 98488)

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, நிறுவனச் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் கீழ் நிறுவனத்தின் அறிவிக்கப்பட்ட மூலதனத்தின் குறைப்புக்கான பொது அறிவித்தல்

இல. 253, ரஜ மாவத்தை, ஏக்கல, ஜா-எலயில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட டி எச் டீ சிமெண்ட் ( பிறைவெட்) லிமிடெட் பின்வருமாறு இந்த அறிவித்தல் திகதியில் இருந்து அறுபது (60) நாட்கள் காலாவதியான பின்னர், அதன் அறிவிக்கப்பட்ட மூலதனத்தை குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

*குறைப்புக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட மூலதனம்:* இ.ரூபா 4,108,499,062.00
*குறைப்புக்கு பின்னர் அறிவிக்கப்பட்ட மூலதனம்:* இ.ரூபா 3,513,564,722.00
*குறைப்பின் தொகை :* இ.ரூபா 594,934,340.00

சபையின் ஆணைப்படி,

ஹேலீஸ் குருப் சேர்விசஸ் ( பிறைவெட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

இல.400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2026, பெப்புருவரி 19.

03- 07

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் கீழான ஒன்றிணைப்பு (Amalgamation)

ரொக்லண்ட் டிஸ்டிலரீஸ் ( பிரைவேட்) லிமிடெட் ( பிவி 9841) மற்றும் ரொக்லண்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் ( பிரைவேட்) லிமிடெட்( பிவி 9740)

ரொக்லண்ட் டிஸ்டிலரீஸ் ( பிரைவேட்) லிமிடெட் (பிவி9841) மற்றும் ரொக்லண்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் ( பிரைவேட்) லிமிடெட் (பிவி 9740) ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகள், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் விதிகளுக்கு அமைவாக,"ரொக்லண்ட்

டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்" நிறுவனத்தை ஞஞரொக்லண்ட் டிஸ்டிலரீஸ் (பிரைவேட்) லிமிடெட்" நிறுவனத்துடன் ஒன்றிணைக்கத் தீர்மானித்துள்ளன என்பதை இதன் மூலம் அறிவிக்கின்றோம். தொடர்ந்து இயங்கும் நிறுவனமான "ரொக்லண்ட் டிஸ்டிலரீஸ் ( பிரைவேட்) லிமிடெட்" அமையும் என்பதுடன், அதன் பணிப்பாளர்கள் ஒன்றிணைப்பின் பின்னரும் ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பணிப்பாளர்களாகத் தொடர்ந்து நீடிப்பார்கள்.

"ரொக்லண்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்" நிறுவனமானது "ரொக்லண்ட் டிஸ்டிலரீஸ் ( பிரைவேட்) லிமிடெட்" நிறுவனத்திற்கு முழுமையாகச் சொந்தமான ஒரு துணை நிறுவனமாகும். இந்த ஒன்றிணைப்பின் நிபந்தனைகளின்படி "ரொக்லண்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்" நிறுவனத்தின் அனைத்துப் பங்குகளும் எந்தவிதக் கொடுப்பனவோ அல்லது பிரதிபலனோ இன்றி ரத்துச் செய்யப்படும். அத்துடன் "ரொக்லண்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்" நிறுவனத்தின் அனைத்துச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் "ரொக்லண்ட் டிஸ்டிலரீஸ் ( பிரைவேட்) லிமிடெட்" நிறுவனம் பொறுப்பேற்கும்.

இந்த முன்மொழியப்பட்ட ஒன்றிணைப்பு இரண்டு நிறுவனங்களினதும் சிறந்த நலன் கருதியது என நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் கருதுகின்றன. மேலும், ஒன்றிணைப்பு நடைமுறைக்கு வந்தவுடன், ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனமான "ரொக்லண்ட் டிஸ்டிலரீஸ் ( பிரைவேட்) லிமிடெட்" கடன் தீர்க்கும் வலுச்சோதனையை உடனடியாக பூர்த்தி செய்யும் என்றும் சபைகள் திருப்தி அடைந்துள்ளன.

இந்த ஒன்றிணைப்பு 2026, மாச்சு மாதம் 31 ஆந் திகதி அல்லது நிறுவனங்களின் பதிவாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் வேறு ஏதேனும் ஒரு திகதியில் நடைமுறைக்கு வரும்.

இயக்குநர் சபையின் பணிப்புரையின் அடிப்படையில்,

கிரெஸ்டன் கார்ப்பரேட் சர்வீசஸ்
(பிரைவேட்) லிமிடெட்,
நிறுவன செயலாளர்கள்,
ரொக்லண்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்
( பிரைவேட்) லிமிடெட்.

03- 01

## ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

வீர லன்கா எண்ட்டபிரைசார்ஸ் (பிரைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0203 1000 0222/ 1203 1401 3199

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2025.06.25ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2025.08.07ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் ( Gazette) 2025.08.14 ஆந் திகதிய திவயின (Divaina) , ஐலண்ட் (Island), தினக்குரல் (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட பின்வரும் சொத்துக்கள் நிலமனைகளை மேற்கூறிய நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து கட்டணங்கள் மற்றும் வட்டியையும் அறவிட்டுக் கொள்வதற்கு கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான என். யூ.ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பின்வரும் திகதிகள் மற்றும் நேரங்களுக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் 02 ஆவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட சொத்து

திகதி: 2026.05.15
நேரம்: மு.ப. 10.30
இடம்: கோண்வெவ, இல. 216 எனும் கிராம அலுவலர் பிரிவின் தெமல ஹல்மில்லேவ இல் அமைந்த "கொடஇடம"
நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் 03 ஆவது அட்டவணை யில் விபரிக்கப்பட்ட சொத்து 2

திகதி: 2026.05.15
நேரம்: மு.ப. 11.00
இடம்: மஹாவெஸ்ஸலாவ இல.230 எனும் கிராம அலுவலர் பிரிவின் வட்டருக்வெவ கிராமத்தில் அமைந்த "கொடஇடம"
நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் 04 ஆவது அட்டவணை யில் விபரிக்கப்பட்ட சொத்து 3

திகதி: 2026.05.15
நேரம்: மு.ப. 11.30
இடம்: இல.37A எனும் கிராம அலுவலர் பிரிவின் வட்டருக்வெவ கிராமத்தில் அமைந்த "பொரளுவலே ஹேன ( கொட இடம)"

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட முதலாவது அட்டவணை**

2. வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், மாஹாபொத்தன கோரளே கஹாட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கஹாட்டகஸ்திகிலிய பிரதேச சபை எல்லைகளுக்குள் கோன்வெவ இல. 216 எனும் கிராம சேவகர் பிரிவின் தெமல ஹல்மில்லேவ இல் அமைந்த "கொட இடம" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். பீ. ரத்னசிரி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017, செத்தெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 8415 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: FVP 1333 இன் லொட் 41; கிழக்கு: FVP 1333 இன் லொட் இலக்கங்கள் 41 மற்றும் 34; தெற்கு: FVP 1333 இன் லொட் 34 மற்றும் மேற்கு: FVP 1333 இன் லொட் இலக்கங்கள் 34, 35 மற்றும் 41, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு ஏக்கர் மற்றும் மூன்று பேர்ச் (02ஏ. 00றூ. 03பே) அல்லது 0.8102 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த

அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8415 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

தெமல ஹல்மில்லேவ கிராமத்தில் அமைந்த "கொட இடம" என்றழைக்கப்படும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட FVP இல. 1333 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 33 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு:லொட் 41; கிழக்கு:லொட் இலக்கங்கள் 41 மற்றும் 34; தெற்கு:லொட் 34 மற்றும் மேற்கு:லொட் இலக்கங்கள் 41, 34 மற்றும் 35 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் 0.8102 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், FVP 1333 எனும் அமைவாக அநுராதபுரம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் LDO V 08/111 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், உதீயன்குளம் கோரளே கஹாட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கஹாட்டகஸ்திகிலிய பிரதேச சபை எல்லைகளுக்குள் மாஹாவெஸ்ஸலாவ இல. 230 எனும் கிராம சேவகர் பிரிவின் வட்டருக்வெவ கிராமத்தில் அமைந்த "கொட இடம" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. எம். எஸ். பி. குலதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2009, செத்தெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 260 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: FVP 1295 இன் லொட் 46; கிழக்கு: FVP 1295 இன் லொட் 64; தெற்கு: வீதி (RDA) மற்றும் ஒதுக்கம் (FVP 1295 இன் லொட் 35) FVP 1333 இன் லொட் 34 மற்றும் மேற்கு: FVP 1295 இன் லொட் 62, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் மற்றும் நான்கு தசம் ஆறு பேர்ச் (00ஏ. 02றூ. 4.6பே) அல்லது 0.2140 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 260 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

கூறப்பட்ட வட்டருக்வெவ கிராமத்தில் அமைந்த "கொட இடம" என்றழைக்கப்படும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட FVP இல. 1295 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 63 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு:லொட் 46; கிழக்கு:லொட் 64; தெற்கு:பிரதான வீதி மற்றும் மேற்கு: லொட் 62, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் 0.214 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1295 எனும் வரைபடத்திற்கு அமைவாக அநுராதபுரம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் LDO V 08/112 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், உதீயன்குளம் கோரளே கஹாட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கஹாட்டகஸ்திகிலிய பிரதேச சபை எல்லைகளுக்குள் இல. 37A எனும் கிராம சேவகர் பிரிவின் வட்டருக்வெவ கிராமத்தில் அமைந்த "பொரளுவலே ஹேன (கொட இடம)" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். பி. ரத்னசிரி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, ஒற்றோபர் 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 5628 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: காணிகளிலிருந்து பிரதான தெரு வரையான வீதி; கிழக்கு: FVP 1295 இன் லொட் 59; தெற்கு: அநுராதபுரம் - திருகோணமலை பிரதான வீதியினூடாக வீதி ஒதுக்கம் மற்றும் மேற்கு: FVP 1295 இன் லொட் 56, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் மற்றும் பன்னிரெண்டு தசம் ஐந்து பேர்ச் (00ஏ. 02றூ. 12.5பே) அல்லது 0.2340 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5628 எனும் வரைபடத்திற்கு அமைவாக அநுராதபுரம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் LDO V 05/11 (வேறு விபரங்கள்) இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 1222 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

03- 80

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

சன்கிறெஸ்ட் டீஸ் (பிறைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0078 1000 1601

